# வரலாற்றுக்கு முந்தைய கால இந்தியா



தொல்பொருள்கள்

வரலாற்றுக்கு முந்தைய காலத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்கு எழுத்து வடிவிலான சான்றுகள் கிடைப்பதில்லை. இருப்பினும், இந்தியாவின் பல்வேறு பகுதிகளிருந்து கிடைத்துள்ள ஏராளமான தொல்பொருள் சான்றுகளின் அடிப்படையில் இக்கால வரலாற்றைப் படைக்க முடிகிறது. கற்கருவிகள், மட்பாண்ட ஓடுகள், கலைப்பொருள்கள், உலோகக் கருவிகள் போன்ற பொருட்கள், இவற்றில் அடங்கும்.

- இந்தியாவைப் பொறுத்தவரை, வரலாற்றுக்கு முந்தைய காலத்தை பின்வருமாறு பிரிக்கலாம்

**பழைய கற்காலம்**
(கி.மு. 10000 ஆண்டுகளுக்கு முன்பு)

**இடைக்கற்காலம்**
(கி.மு. 10000 - கி.மு. 6000)

**புதிய கற்காலம்**
(கி.மு. 6000 - கி.மு. 4000)

**தாமிர கற்காலம்**
( கி.மு. 4000 ___ கி.மு.1500)

**உலோகக் காலம்**
(கி.மு. 1500 ___ கி.மு. 600)

- இருப்பினும், இந்திய துணைக்கண்டம் வரலாற்றுக்கு முந்தைய காலம் அறிவியலின் துணைகொண்டு நன்கு வரையறுக்கப்படுகிறது.
- பொதுவாக ரேடியோ கார்பன் முறையே இதற்கு பயன்படுத்தப்படுகிறது.
- ரேடியோ கார்பன் தொழில் நுட்ப முறையை **வில்லார்டு லிப்பி** என்பவர் 1949-ம் ஆண்டு கண்டு பிடித்தார்.
- 1960-ம் ஆண்டு இவர் வேதியியல் துறையில் நோபல் பரிசு பெற்றார்.
- ரேடியோ ஐசோடோப்பு கார்பன் 14-ன்(C-14) அரை ஆயுட்காலம் 5,730 ஆண்டுகள்.
- ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப்பின் உயிர்சார் பொருட்களில் எந்த

